



# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் நாமக்கல்

## மோகனூர் ஊராட்சி ஒன்றியம்

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், அணியாபுரம் ஊராட்சி/கிராமம், ச.எண்:109/1B அமையும் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

அளவு : 1அங்குலம் = 33அடி (1:400)

இணையதள எண்: NKL / 0SP1AVCN / 16912 / 2023

வ

**குறிப்பு:**

மனைப்பிரிவின் பரப்பு : 0.51¾ ஏக்கர் (அ) 2094.00 ச.மீ

மனைப்பிரிவு எல்லை

நிலையிலுள்ள சாலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மனைஉட்பிரிவின் எல்லை | : | ABCD | | | |
| மனை எண் 1 ன் பரப்பு | : | 295.08 | ச.மீ | எல்லை | abcd |
| மனை எண் 2 ன் பரப்பு | : | 265.94 | ச.மீ | எல்லை | dcfe |
| மனை எண் 3 ன் பரப்பு | : | 265.56 | ச.மீ | எல்லை | efgh |
| மனை எண் 4 ன் பரப்பு | : | 265.18 | ச.மீ | எல்லை | hgji |
| மனை எண் 5 ன் பரப்பு | : | 264.87 | ச.மீ | எல்லை | ijkl |
| மனை எண் 6 ன் பரப்பு | : | 264.49 | ச.மீ | எல்லை | lknm |
| மனை எண் 7 ன் பரப்பு | : | 237.77 | ச.மீ | எல்லை | mnop |
| மனை எண் 8 ன் பரப்பு | : | 236.11 | ச.மீ | எல்லை | porq |

**நிபந்தனைகள்:**

1. அரசாணை எண் 18–ன் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 4.2.2019–ன் படி அரசு வழிக்காட்டி மதிப்பின்படி தொகையை செலுத்தப்பட வேண்டும்.
2. அரசாணை எண் 134 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 20.09.2002–ன் படி நில உரிமம் குறித்து ஊள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழுத்திருப்தியில் உள்ளது என சான்று அளித்துள்ளதன் பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவிற்குத் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்/ஆணையர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின்பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் – குத்தகை பத்திரம் – பட்டா – தானப்பத்திரம் – பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாருக்கு வளர்ச்சி செய்ய உள்ளதா பார்க்கப்படுகிறது சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைஉட்பிரிவு வரைபடத்தினை எந்த வித மாற்றமும், விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்
7. உத்தேச மனை உட்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
8. உத்தேச மனை உட்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
9. உத்தேச இடத்தில் நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைஉட்பிரிவின் அனுமதி செல்லத்தக்கது அல்ல.

APPROVAL No: SWP/ DTCP/ NAMAKKAL/ LAYOUT No: 398 / 2023

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்